Reg. No. 1-M.

# போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

## I-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்.

## SUPPLEMENT TO PART I OF THE FORT ST. GEORGE GAZETTE.

JULY 8, 1930.

ந. 28.] மதராஸ்: செவ்வாய்க்கிழமை மாலை, 1930-ம்௵ ஜூலை௴ 8௳. [PRICE, 1 *anna*.

## கவர்ன்மென்ட் விளம்பரங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு.

## Tamil Translation of Notifications by Government.

### லா டிபார்ட்மென்ட்.

(ஜெனரல்).

### விளம்பரங்கள்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1930-ம்௵ ஜூன்௴ 9௳.

நெ. 455.—1923-ம்௵ மார்ச்௴ 20௳யுள்ள **போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்** I-ம் பாகத்தின் 327-வது பக்கத்திலும் அதற்கு அடுத்த பக்கங்களிலும் (இங்கிலிஷில்) பிரசுரிக்கப்பட்டிருக்கும் லா (ஜெனரல்) டிபார்ட்மென்டில் பிறந்த 209-ம் நெ. விளம்பரத்தில் பிரசித்தம் செய்யப்பட்டுள்ள 1923-ம்௵த்திய சென்னபட்டணத்து மோடார் வண்டிகளைக் குறித்த விதிகளில் (1914-ம்௵த்து 8-வது ஆக்டாகிய) 1914-ம்௵த்திய இந்துதேசத்து மோடார் வண்டிகளாக்ட் 11-வது பிரிவின்படி, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் செய்ய உத்தேசிக்கும் திருத்தத்தின் அடியிற் கண்ட மசோதாவானது - அதனால் வெகுசாய் பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்குத் தெரியும் பொருட்டு இதனால் பிரசித்தம் செய்யப்படுகிறது. மேலும், ஷை மசோதா 1930-ம்௵ ஆகஸ்ட்௴ 1௳ யன்றைக்காவது அதற்குப் பிறகாவது ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், அந்த மசோதா விஷயமாய் மேலே கண்ட தேதிக்குமுன் எந்த நபரிடமிருந்தாகிலும் வந்துசேரக்கூடிய எவையேனும் அபிப்பிராயக்குறிப்புகள் அல்லது ஆட்சேபனைகளைப் பற்றி ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் யோசிப்பார்களென்றும் இதனால் அறிக்கையிடப்படுகிறது:—

#### மசோதா திருத்தம்.

"G" அனுமதிச்சீட்டைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட திட்டத்தில் கண்ட "அனுமதிச்சீட்டைக்" என்னும் வார்த்தைக்குப் **பர்த்தியாக** அடியிற்கண்ட வார்த்தைகளை **அமைத்துக்கொள்ளவும்**:—

"இந்த அனுமதிச்சீட்டையும் (4) குறிப்பிட்ட திட்டத்தில் **நிர்ணயிக்கப்பட்டிருக்கும்** (brake) ப்ரேக் ஸெர்டிபிகேட்டையும்."

---

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1930-ம்௵ ஜூன்௴ 18௳.

நெ. 479.—1923-ம்௵ மார்ச்௴ 20௳யுள்ள **போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்** I-ம் பாகத்தின் 327-வது பக்கத்திலும் அதற்கு அடுத்த பக்கங்களிலும் (இங்கிலிஷில்) பிரசுரிக்கப்படடிருக்கும் லா (ஜெனரல்) டிபார்ட்மென்டில் பிறந்த 209-ம் நெ. விளம்பரத்தில் பிரசித்தம் செய்யப்பட்டுள்ள 1923-ம்௵த்திய சென்னபட்டணத்து மோடார் வண்டிகளைக் குறித்த விதிகளில், (1914-ம்௵த்து 8-வது ஆக்டாகிய) 1914-ம்௵த்திய இந்துதேசத்து மோடார் வண்டிகளாக்ட் 11-வது பிரிவின்படி, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் செயய உத்தேசிக்கும் திருத்தத்தின் அடியிற்கண்ட மசோதாவானது-அதனால் வெகுசாய் பாதிக்கப்படக்கூடிய நபர்

களுக்குத் தெரியும்பொருட்டு இதனால் பிரசித்தம் செய்யப்படுகிறது. மேலும், ஷை மசோதா 1930-ம் ஹு ஆகஸ்ட் மீ 1 உ யன்றைக்காவது அதற்குப் பிறகாவது ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அந்த மசோதா விஷயமாய் மேலேகண்ட தேதிக்குமுன் எந்த நபரிடமிருந்தாகிலும் வந்துசேரக்கூடிய எவையேனும் அபிப்பிராயக்குறிப்புகள் அல்லது ஆட்சேபனைகளைப்பற்றி ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் யோசிப்பார்களென்றும் இதனால் அறிக்கையிடப்படுகிறது :—

### மசோதா திருத்தம்.

ஷை விதிகளைச் சேர்ந்த 27-D விதியில் கண்ட முதல் வாக்கியத்துக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட வாக்கியத்தை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

"சென்னை ராஜதானிப்பட்டணத்தில் பொலீஸ் கம்மிஷனரும் இதர இடங்களில் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுகளும் - தங்கள் தங்களுடைய விசாரணை அதிகாரப் பிரதேசங்களில், மோடார் பஸ்ஸுகள் இன்ன இடங்களில் புறப்பட்டு இன்ன இடங்கள் வரையில் போகலாமென்று நிஷ்கரிஷை செய்யலாம் ; அந்த இடங்களுக்கு மத்தியில் வாடகைக்கு விடப்படுவதற்காவது ஓட்டப்படுவதற்காவது அவைகளுக்கு அனுமதி கொடுக்கவேண்டும்."

எ. எப். டபிள்யு டிக்ஸன்,
கவர்ன்மென்ட் டெப்யுடி ஸெக்ரெடரி.

---

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1930-ம் ஹு ஜுன் மீ 24 உ (மிஸலேனியஸ், 2674-ம் ந. கவர்ன்மென்ட் உத்தரவு).

நெ. 503.—மலையாளம் ஜில்லாவிலே கவர்ன்மென்ட் பாட்டைகளில் இன்ன திட்டங்களுக்கு உட்பட்டும் இன்ன கட்டணங்களைச் செலுத்துவதன்மேலும் மோடார் வண்டிகளை வாடகைக்கு விடலாம் அல்லது ஓட்டலாமென்று நிர்ணயிப்பதற்காக 1928-ம் ஹு ஆகஸ்ட் மீ 8 உ லா (ஜெனரல்) டிபார்ட்மென்டில் பிறந்து, 1928-ம் ஹு ஆகஸ்ட் மீ 14 உ யுள்ள போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட் I-ம் பாகத்தின் 1230, 1231-வது பக்கங்களிலே (இங்கிலிஷில்) பிரசுரிக்கப்பட்டிருக்கும் 628-ம் நெ. விளம்பரத்தில் பிரசித்தம் செய்யப்பட்டுள்ள விதிகளில், (1914-ம் ஹுத்து 8-வது ஆக்டாகிய) 1914-ம் ஹுத்திய இந்துதேசத்து மோடார் வண்டிகளாக்ட் 11-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (e) அடையாளமிட்ட பகுதியின்படி தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் அடியிற்கண்ட திருத்தங்களைக் களிகூர்ந்து வெளியிடுகிறார்கள் :—

### திருத்தங்கள்

### I

ஷை விதிகளில் கண்ட பீடிகைக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட பீடிகையை அமைத்துக் கொள்ளவேண்டும் ; அதாவது :—

"(a) மலையாளம் ஜில்லாவில், 1920-ம் ஹுத்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்டின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு லோகல் போர்டின் அல்லது 1920-ம் ஹுத்திய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு மியுனிஸிபாலிடியின் அதிகாரவரம்புக்குள் இராத கவர்ன்மென்ட் பாட்டைகளிலும்,

(b) சிறிதுமட்டில் அப்படிப்பட்ட கவர்ன்மென்ட் பாட்டைகளிலும், சிறிதுமட்டில் லோகல் போர்ட் அல்லது மியுனிஸிபாலிடியைச் சேர்ந்த பாட்டைகளிலும் அல்லது இவ்விரண்டு பாட்டைகளிலும்

இன்ன திட்டங்களுக்கு உட்பட்டும் இன்ன கட்டணங்களைச் செலுத்துவதன்மேலும் மோடார் வண்டிகளை வாடகைக்கு விடலாம் அல்லது ஓட்டலாமென்று நிர்ணயித்து, (1914-ம் ஹுத்து 8-வது ஆக்டாகிய) 1914-ம் ஹுத்திய இந்துதேசத்து மோடார் வண்டிகளாக்ட் 11-வது பிரிவின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் அடியிற்கண்ட விதிகளைக் களிகூர்ந்து வெளியிடுகிறார்கள்."

### II

ஷை விதிகளில் 1-வது விதிக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட விதியை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

"1. (a) சம்பந்தப்பட்ட எக்ஸிக்யுடிவ் என்ஜினீரிடமிருந்து லைசென்ஸ் பெற்றுக்கொண்டன்றி மற்றப்படி, மலையாளம் ஜில்லாவில் 1920-ம் ஹுத்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்டின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு லோகல் போர்டின் அல்லது 1920-ம் ஹுத்திய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு மியுனிஸிபாலிடியின் அதிகாரவரம்புக்கு வெளியேயிருக்கும் கவர்ன்மென்ட் பாட்டைகளில் எந்த மோடார் வண்டியையும் வாடகைக்கு விடவுங்கூடாது ஓட்டவுங்கூடாது.

(b) டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடென்டினிடமிருந்து லைசென்ஸ் பெற்றுக்கொண்டன்றி மற்றப்படி, மலையாளம் ஜில்லாவில் சிறிதுமட்டில் கவர்ன்மென்ட் பாட்டைகளிலும் சிறிதுமட்டில் லோகல் போர்ட் அல்லது மியுனிஸிபாலிடியைச் சேர்ந்த பாட்டைகளிலும் அல்லது இவ்விரண்டு பாட்டைகளிலும் எந்த மோடார் பஸ் அல்லது டாக்ஸியையும் வாடகைக்கு விடவுங்கூடாது ஓட்டவுங்கூடாது.

(c) சம்பந்தப்பட்ட எக்ஸிக்யுடிவ் என்ஜினீரிடமிருந்து லைசென்ஸ் பெற்றுக்கொண்டன்றி மற்றப்படி, மலையாளம் ஜில்லாவில் சிறிதுமட்டில் கவர்ன்மென்ட் பாட்டைகளிலும் சிறிதுமட்டில் லோகல் போர்ட் அல்லது மியுனிஸிபாலிடியைச் சேர்ந்த பாட்டைகளிலும் அல்லது இவ்விரண்டு பாட்டைகளிலும் எந்த மோடார் லாரி அல்லது ட்ரெய்லரையும் (பின்னே சேர்க்கப்படும் வண்டியையும்) வாடகைக்கு விடவுங்கூடாது ஓட்டவுங்கூடாது."

### III

ஷை விதிகளில் 2-வது விதியைச் சேர்ந்த (b) குறிப்பிட்ட உபவிதியிலுள்ள 2-வது,

3-வது வாக்கியங்களுக்குப் பார்த்தியாக அடியிற்கண்ட வாக்கியங்களை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அவையாவன :—

“1-வது விதியைச் சேர்ந்த (a), (c) குறிப்பிட்ட உபவிதிகளில் கண்டுள்ள மோடார் வண்டிகள் விஷயமாய்க் கொடுக்கப்படும் லைசென்ஸுகள் இந்த விதிகளுடன் சேர்த்திருக்கும் A நமூனாப்படி இருக்கவேண்டும். மேலும், ஷை விதியைச் சேர்ந்த (b) குறிப்பிட்ட உபவிதியில் கண்டுள்ள மோடார் வண்டிகள் விஷயமாய்க் கொடுக்கப்படும் லைசென்ஸுகள் இந்த விதிகளுடன் சேர்த்திருக்கும் B நமூனாப்படி இருக்கவேண்டும். அந்த லைசென்ஸுகள் கொடுக்கப்பட்ட தேதிக்கு அடுத்துவரும் ஸெப்டெம்பர்மீ 30வ யன்றைக்காவது மார்ச்மீ 31வ யன்றைக்காவது முடிவாய்விடும்.”

## IV

ஷை விதிகளில் 9-வது விதிக்குப் பிறகு அடியிற்கண்ட விதியை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

“9-A. ஒவ்வொரு மோடார் வண்டிக்கும் தகுந்த பிரதிபலிக்கும் கண்ணாடியொன்று பொருத்தப்பட்டிருக்கவேண்டும். ஷை மோடார் வண்டியை ஓட்டுகிறவர் அதற்குப் பின்னால் வேறு ஏதாவது வண்டி இருப்பதையும் அந்த வண்டியை ஓட்டுகிறவர் ஷை மோடார் வண்டியைக் கடந்து செல்ல விருப்பமுடையவராயிருப்பதையும் தெரிந்துகொள்ளக்கூடிய விதமாக ஷை கண்ணாடி பொருத்தப்பட்டிருக்கவேண்டும்.”

## V

ஷை விதிகளில் 10-வது விதிக்குப் பார்த்தியாக அடியிற்கண்ட விதியை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

“10. இந்த விதிகளில் கண்ட நிர்ப்பந்தங்களிலாவது வரையறைகளிலாவது திட்டங்களிலாவது எதன்படிக்காகிலும் நடவாமல் லைசென்ஸ்தாரர் தப்பித்துக்கொண்டாலும், அவைகளில் எதையாகிலும் அவர் மீறிநடந்தாலும், தப்பான சங்கதி தெரிவித்தோ மோசடியாகவோ அவர் லைசென்ஸ் பெற்றிருந்தாலும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி எக்ஸிக்யுடிவ் என்ஜினீராவது டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடென்டாவது எப்போதாயினும் லைசென்ஸைச் சிறிதுகாலம் செலாவணியாகவொட்டாமல் நிறுத்திவைக்கலாம் அல்லது அதை ரத்துசெய்துவிடலாம். லைசென்ஸைச் சிறிதுகாலம் செலாவணியாகவொட்டாமல் நிறுத்திவைத்தோ அல்லது ரத்துசெய்தோ எக்ஸிக்யுடிவ் என்ஜினீராவது டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடென்டாவது பிறப்பித்த யாதொரு உத்தரவின்மேல், சந்தர்ப்பத்துக்கேற்றபடி சம்பந்தப்பட்ட ஸுபரின்டெண்டிங் என்ஜினீரிடமோ டிஸ்ட்ரிக்ட் போர்டாரிடமோ அப்பீல் செய்துகொள்ளலாகும். யாதொரு லைசென்ஸ் ரத்துசெய்யப்பட்டிருந்தாலும் சிறிதுகாலம் செலாவணியாகவொட்டாமல் நிறுத்திவைக்கப்பட்டிருந்தாலும், அதை வைத்திருப்பவர் அதைக் கொடுத்த அதிகாரியிடம் அதை உடனே வாபஸ்செய்துவிடவேண்டும்.”

## VI

ஷை விதிகளில் 11-வது விதிக்குப் பார்த்தியாக அடியிற்கண்ட விதியை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

“வாடகைக்கு விடப்படும் அல்லது ஓட்டப்படும் சகல மோடார் வண்டிகளையும்—

(a) அவைகள் கவர்ன்மெண்ட் பாட்டைகளில் இருக்கும்போது, எக்ஸிக்யுடிவ் என்ஜினீராவது அஸிஸ்டன்ட் என்ஜினீராவது ஓவர்ஸியரின் அந்தஸ்துக்கு மேற்பட்ட அந்தஸ்துள்ள பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மென்டைச் சேர்ந்த யாதொரு உத்தியோகஸ்தராவது, இது விஷயமாய் எக்ஸிக்யுடிவ் என்ஜினீரால் பிரத்தியேகமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற அதே இலாகாவைச் சேர்ந்த யாதொரு ஓவர்ஸியாராவது,

(b) அவைகள் லோகல் போர்ட் அல்லது மியுனிஸிபாலிடியைச் சேர்ந்த பாட்டைகளில் இருக்கும்போது, டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடென்டாவது வைஸ் ப்ரெஸிடென்டாவது லோகல் பண்ட் என்ஜினீரிங் டிபார்ட்மென்டைச் சேர்ந்த யாதொரு உத்தியோகஸ்தராவது

பார்வையிடுவது சாத்தியமாயிருக்கவேண்டும்.”

## VII

ஷை விதிகளில் 12-வது விதிக்குப் பார்த்தியாக அடியிற்கண்ட விதியை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

“12. யாதொரு வாராவதிக்காவது கல்வெர்ட்டுக்காவது (சிறு பாலத்துக்காவது) பாட்டைகளைச் சேர்ந்த வேறே யாதொரு சொத்துக்காவது மோடார் வண்டி ஓடுவதனால் சாதாரணமாய் ஏற்படும் தேய்வு மாய்வைத் தவிர பலமான சேதம் ஏதாகிலும் உண்டாக்கப்பட்டிருந்தால், நஷ்டம் கட்டிக்கொடுக்கும்படி கேட்கப்படுவதன்மேல், சந்தர்ப்பத்துக்கேற்றபடி பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மென்டுக்காவது டிஸ்ட்ரிக்ட் போர்டுக்காவது மியுனிஸிபாலிடிக்காவது லைசென்ஸ்தாரர் நஷ்டம் கட்டிக்கொடுக்கவேண்டும். அப்படிப்பட்ட நஷ்டம் கட்டிக்கொடுப்பதற்கு லைசென்ஸ்தாரர் தவறிப்போனால், கேட்கப்பட்ட தொகை செலுத்தப்படுகிறவரையில், லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரியானவர் லைசென்ஸைச் சிறிதுகாலம் செலாவணியாகவொட்டாமல் நிறுத்திவைக்கலாம்.”

## VIII

ஷை விதிகளில் 13-வது விதிக்குப் பார்த்தியாக அடியிற்கண்ட விதியை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

“13. இந்த விதிகளின்படி லைசென்ஸ் கொடுக்கப்பெற்றிருக்கும் மோடார் வண்டியின் பாரமானது பூர்த்தியாய் பளுவு ஏற்றியிருக்கும்போது, $3\frac{1}{2}$ டன்னுக்கு மேற்பட்டிருக்கக் கூடாது.”

## IX

ஷை விதிகளில் 15-வது விதியில், ‘‘எக்ஸிக்யுடிவ் என்ஜினீரின்’’ என்னும் வார்த்தைகளுக்குப் பார்த்தியாக ‘‘சந்தர்ப்பத்துக்கேற்றபடி

எக்ஸிக்யுடிவ் என்ஜினீரின் அல்லது டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடென்டின்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

## X

ஷை விதிகளில் 17-வது விதிக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட விதிகளை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

"17-A. கவர்ன்மென்ட் பாடடைகளில் மாத்திரமே வாடகைக்கு ஓடும் மோடார் வண்டிகளின் விஷயத்தில், அடியிற்கண்ட வீதங்களின்படி லைஸென்ஸ கட்டணம் விதித்து வாங்கப்படும் :—

| வண்டியின் வகுப்பு | லைஸென்ஸ் கட்டண வீதம். |
|---|---|
| 1. லாரிகளல்லாத இதர மோடார் வண்டிகள்— | |
| (a) (ந்யுமாடிக்) காற்று உள்ளே அடைக்கபபட்டிருக்கும் கட்டுகள் எல்லாச் சக்கரங்களுக்கும போட்டிருந்தால். | உட்காரும் இடம் ஒன்றுக்கு அரை வருஷத்துக்கு 15 ரூபாய், அல்லது உட்காரும் இடம் ஒன்றுக்கு ஒரு வருஷத்துக்கு 25 ரூபாய். |
| (b) அந்தப்படி போட்டிராவிட்டால். | உட்காரும் இடம் ஒன்றுக்கு அரை வருஷத்துக்கு ரூ. 22–8–0, அல்லது உட்காரும் இடம ஒன்றுக்கு ஒரு வருஷத்துக்கு ரூ. 37–8–0. |
| 2. (i) பூர்த்தியாய் பளுவு ஏற்றியிருக்கும்போது $1\frac{1}{2}$ டன் பாரமுள்ள அல்லது அதற்குக் குறைந்த பாரமுள்ள மோடார் லாரிகள் அல்லது ட்ரெய்லர்கள்— | |
| (a) காற்று உள்ளே அடைக்கப்பட்டிருக்கும் கட்டுகள் போட்டிருந்தால். | அரை வருஷத்துக்கு 100 ரூபாய், அல்லது ஒரு வருஷத்துக்கு 175 ரூபாய். |
| (b) அந்தப்படி போட்டிராவிட்டால். | அரை வருஷத்துக்கு 150 ரூபாய், அல்லது ஒரு வருஷத்துக்கு ரூ. 262–8–0. |
| (ii) பூர்த்தியாய் பளுவு ஏற்றியிருக்கும்போது $1\frac{1}{2}$ டன் பாரத்துக்கு மேற்பட்டு $3\frac{1}{2}$ டன் பாரமோ அல்லது அதற்குக் குறைந்த பாரமோவுள்ள மோடார் லாரிகள் அல்லது ட்ரெய்லர்கள்— | |
| (a) காற்று உள்ளே அடைக்கப்பட்டிருக்கும் கட்டுகள் போட்டிருந்தால். | அரை வருஷத்துக்கு 200 ரூபாய், அல்லது ஒரு வருஷத்துக்கு 350 ரூபாய். |

| வண்டியின் வகுப்பு. | லைஸென்ஸ் கட்டண வீதம். |
|---|---|
| (b) அந்தப்படி போட்டிராவிட்டால். | அரை வருஷத்துக்கு 300 ரூபாய், அல்லது ஒரு வருஷத்துக்கு 525 ரூபாய். |

யாதொரு மோடார் வண்டி அல்லது ட்ரெய்லரின் விஷயத்தில் லைஸென்ஸ் கட்டணம் செலுத்தியிருப்பதனுல், அந்த மோடார் வண்டி அல்லது ட்ரெய்லருக்காக சுங்கமும் ஓடத்துறைக்கட்டணமும் செலுத்துவதனின்றும் நிவாரணை ஏற்படமாட்டாது.

**விவரணம்.**—இந்த விதியின் காரியத்துக்காக, ஒரு வருஷத்தில் ஆறு மாதத்துக்குக் குறைந்த பாகமானது அரை வருஷமாகவும், ஒரு வருஷத்தில் ஆறு மாதத்துக்கு மேற்பட்ட பாகமானது ஒரு வருஷமாகவும் பாவிக்கப்படும்.

"17-B. சிறிதுமட்டில் கவர்ன்மென்ட் பாட்டைகளிலும் சிறிதுமட்டில் லோகல் போர்ட் அல்லது மியுனிஸிபாலிடியைச் சேர்ந்த பாட்டைகளிலும் அல்லது இவ்விரண்டு பாட்டைகளிலும் வாடகைக்கு ஓடும் மோடார் வண்டிகளின் விஷயத்தில், அடியிற்கண்ட வீதங்களின்படி லைஸென்ஸ் கட்டணம் விதித்து வாங்கப்படும்.

| வண்டியின் வகுப்பு. | லைஸென்ஸ் கட்டண வீதம். |
|---|---|
| மோடார் பஸ்ஸுகளும் டாக்ஸியும். | லைஸென்ஸ் எந்தக் கால அளவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்தக் கால அளவில் வண்டி வெகுசாய் ஓடக்கூடிய தூரத்தில் மைல் ஒன்றுக்கு ஆறு பை. |
| லாரிகள் அல்லது ட்ரெய்லர்கள். | 17-A விதியில் குறிப்பிட்டிருக்கும் வீதங்கள்." |

யாதொரு மோடார் வண்டி அல்லது ட்ரெய்லரின் விஷயத்தில் லைஸென்ஸ் கட்டணம் செலுத்தியிருப்பதனுல், அந்த மோடார் வண்டி அல்லது ட்ரெய்லருக்காக சுங்கமும் ஓடத்துறைக் கட்டணமும் செலுத்துவதனின்றும் நிவாரணை ஏற்படமாட்டாது.

**விவரணம்.**—இந்த விதியின் காரியத்துக்காக, ஒரு வருஷத்தில் ஆறு மாதத்துக்குக் குறைந்த பாகமானது அரை வருஷமாகவும், ஒரு வருஷத்தில் ஆறு மாதத்துக்கு மேற்பட்ட பாகமானது ஒரு வருஷமாகவும் பாவிக்கப்படும்.

## XI

ஷை விதிகளைச் சேர்ந்த அனுபந்தத்துக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட அனுபந்தத்தை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

# அனுபந்தம்.

## A நமூனா.

### வாடகைக்கு விடப்படும் அல்லது ஓட்டப்படும் மோடார் வண்டிக்கு லைஸென்ஸ்.

193 -ம் ௵த்து லைஸென்ஸ் ந.

செலுத்தப்பட்ட லைஸென்ஸ் கட்டணம் ரூ..........

..........................டிவிஷன் எக்ஸிக்யுடிவ் என்ஜினீராகிய நான் - .......................ல் வசிப்பவரும்.......................................ல் தலைமை ஆபிஸ் உடையவருமான ..........................................க்குச் சொந்தமாயுள்ள அடியில் விவரிக்கப்பட்டிருக்கும் மோடார் வண்டியை, இதன் கீழே குறிப்பிட்டிருக்கும் கால அளவுக்கு.............................................பாட்டை வழியாய் வாடகைக்கு விடுவதற்கோ அல்லது ஓட்டுவதற்கோ இதன் பின்புறத்தில் அச்சிட்டிருக்கும் விதிகளுக்குட்பட்டும் 1914-ம் ௵த்திய இந்துதேசத்து மோடார் வண்டிகளாக்டுக்கும், சென்னபட்டணத்து மோடார் வண்டிகளைக்குறித்த விதிகளைச் சேர்ந்த 30-வது விதியின்படி டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கொடுத்திருக்கும் அனுமதிச்சீட்டுக்கும் உட்பட்டும் இதனால் லைஸென்ஸ் கொடுக்கிறேன்.

### மோடார் வண்டியின் விவரம்.

| (1) செய்தவர் பெயரும் செய்யப்பட்ட தேதியும். | (2) மோடார் வண்டியின் மாதிரி. | (3) வண்டியினுடைய தொட்டியின் மாதிரி. | (4) இத்தனை பேர் உட்காரலாமென்பது. | (5) இவ்வளவு பாரம் ஏற்றிக்கொண்டு போகலாமென்பது. | (6) ஹார்ஸ் பவர் (இத்தனை குதிரை பலமுள்ளது). | (7) ஸிலிண்டர்களின் சங்கியை. | அடியிற்கண்டவைகளின் மேல் பதிந்திருக்கும் நம்பர். (8) என்ஜின். | (9) ஷாஸி என்னும் அடிச்சட்டம். | (10) பளுவு ஏற்றுமலிருக்கும்போது வண்டியின் பாரம். | பளுவு ஏற்றுமலிருக்கும்போது இரண்டு டன்னுக்கு மேற்பட்ட பாரமுள்ள மோடார் வண்டிகளின் விஷயத்தில், அடியிற் கண்டதை எழுதவும். (11) ஒவ்வொரு இருசின் இருசு பாரம். | (12) ஒவ்வொரு சக்கரத்தின் குறுக்களவு. | (13) ரெஜிஸ்டர் செய்ததைக்குறித்த ஸெர்டிபிகேட்டின் நம்பரும் தேதியும். | (14) இன்ன கால அளவுக்கு ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறதென்பது. | (15) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கொடுத்த அனுமதிச்சீட்டின் நம்பரும் தேதியும். | (16) இன்ன கால அளவுக்கு அனுமதிச்சீட்டு கொடுக்கப்பட்டிருக்கிறதென்பது. | (17) இன்ன கால அளவுக்கு லைஸென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பது. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | |

பூர்த்தியாய் பளுவு ஏற்றியிருக்கும்போது வண்டியின் பாரம்....................................க்கு மேற்படக்கூடாது.

ஷை வண்டி.......................................ல் ஓட்டப்படுகிறது அல்லது கண்டக்ட் செய்யப்படுகிறது.

எக்ஸிக்யுடிவ் என்ஜினீர் ஆபிஸ்,
19 -ம் ௵ மீ உ.

எக்ஸிக்யுடிவ் என்ஜினீர்.

| புதுப்பிக்கப்பட்ட தேதி. | இன்ன கால அளவுக்குப் புதுப்பிக்கப்பட்டதென்பது. முதல். | வரையில். | செலுத்தப்பட்ட கட்டணத் தொகை. | லைஸென்ஸைப் புதுப்பிக்கும் அதிகாரியின் கையெழுத்து. |
|---|---|---|---|---|
| | | | ரூ. அ. ப. | |

## B நமூனா.

..................டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடென்டானவர் - ................ல் வசிப்பவரும் ...............ல் தலைமை ஆபிஸ் உடையவருமான.....................க்குச் சொந்தமாயுள்ள மேலே விவரிக்கப்பட்டிருக்கும் மோடார் வண்டியை, அடியிற்கண்ட திட்டங்களுக்கு உட்பட்டு, இதனுடன் சேர்த்திருக்கும் ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள பாதைகளிலும் திட்டங்

களின்படியும் வாடகைக்கு விடுவதற்கோ அல்லது ஓட்டுவதற்கோ இதனால் அனுமதி கொடுக்கிறார் :—

(1) ..................விருந்து..............வரையில் லைஸென்ஸ் செலாவணியாகும்.

(2) பூர்த்தியாய் பளுவு ஏற்றியிருக்கும்போது வண்டியின் பாரம்........டன்னுக்கு மேற்படக்கூடாது.

(3) வாடகைக்கு ஓட்டப்படும் மோடார் வண்டிகளில் பிரயாணம் செய்யும் பிரயாணிகளிடமிருந்து வாங்கக்கூடிய கட்டணங்கள் அடியிற்கண்ட வீதங்களுக்கு மேற்படக்கூடாது :

முதல் வகுப்பு..................

இரண்டாம் வகுப்பு............

(4) கீழே குறிப்பிட்டிருக்கும் எடை அளவுக்குப் பயணச்சாமான்களைக் கட்டணம் செலுத்தாமலே தம்முடன் கொண்டுபோக ஒவ்வொரு பிரயாணிக்கும் அனுமதி கொடுக்கவேண்டும்.

(5) வாடகைக்கு ஓட்டப்படும் மோடார் வண்டிகளில் கொண்டுபோகப்படும் பயணச்சாமானல்லாத இதர சாமான்களுக்கு வாங்கக்கூடிய கட்டணமானது - ஒரு மைலுக்கு 25 பவுண்ட் எடையைக்கொண்ட ஒவ்வொரு மணங்குக்கும் 6 பைக்கு மேற்படக்கூடாது.

## ஷெட்யூல்.

எந்த பாதைகளில் வண்டி ஓடுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதையும், நாளொன்றுக்கு அது செய்யும் பிரயாணங்களின் சங்கியையையும், நாளொன்றுக்கு அது போகக்கூடிய மைல்களின் சங்கியையையும், நாளொன்றுக்கு வாங்கும் வீதம் சகிதமாகவும், லைஸென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கும் கால அளவுக்கு விதிக்கப்பட்டிருக்கும் மொத்த கட்டணம் சகிதமாகவும் இங்கே எழுதவேண்டும்.

டிஸ்ட்ரிக்ட் போர்ட் ஆபிஸ்,
19 -ம் வரு ஸ்ரீ உ.

ஜே. வெங்கடநாராயண,
கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
*Tamil Translator to Government.*

MADRAS : PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.